“விண்ணும் மண்ணும் இணையும்
ஓகாசன யோகாசன நிலை”



நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்
குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்.

# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 37

[உறுப்பினர்களுக்கு மட்டும்] பதிவு 135/83.

வெளியீடு: 26—1—87 காணிக்கை: ரூ 2-50

# ஓகாசன - யோகாசன நிலைகள்

ஓகாசனம் என்பது ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றையும் தனித் தனியாகப் பிரித்து உணர, தெரிய, கருப்பொருளாக அறிய, புரிய, தொடர்பு படுத்திக் கொள்ள உதவுகின்ற அருளூலகக் கலை. இது. முழுக்க முழுக்க அருளூறு வாசகங் -களையும், குருவழியாக இட்டும் தொட்டும் சுட்டியும் வளர்க்கப்பட்டிடும் வாய்ப்பு வசதிகளையும், மூலிகைகளையும், நவநஞ்சுகளையும் உண்டு உடலைச் சுத்தியும் சித்தியும் செய்து கொள்ளும் வாய்ப்பு வசதிகளையும் பெற்றுத்தான் படிப்படியாகக் கற்றும் நோற்றும் பயின்றும் உற்றுணர வேண்டிய ஓர் உயரிய அரிய கலை. இதனைத் 'தெய்வீகக் கலை', 'கடவுட் கலை' என்ற இரண்டிலும் அடக்கலாம். அதாவது, இதனைப் பயிலுவதற்கு வழிவகைகள் இந்த இரண்டிலும் காணலாம். இதனைக் கற்றுத் தேர்ந்துவிட்டால் 'பேய்க்கலை', 'நோய்க்கலை,' 'தேய்க்கலை', 'மாய்கலை', 'ஓய்கலை', 'சாயாநிலைக் கலைகள்'.......என்று பலகலைகளையும் ஆட்டிப்படைக்கும் வல்லமை கிடைக்கும்.

2. இந்த ஓகாசனத்தைப் பயிலுகின்ற காலத்து ஓரளவு உணவுக் கட்டுப் பாடு தேவை. சாதாரண உடற்பயிற்சி அல்லது சிறிது நேரம் குறிப்பிட்டதூரம் ஓடிவந்த பிறகு இப்பயிற்சியைத் துவக்க வேண்டும். இப்பயிற்சி ஏதேனும் ஒரு கரு வறையின் சூழ்நிலையில் அல்லது அருகில் தக்க குருவின் துணையோடு செய்தல் வேண்டும். இதற்கு அவரவர் உயரத்திற்கு மேல் ஒரு சாண் உயரமுள்ள நீண்ட பிறம்புக் கம்புகள் இரண்டு, ஆரம்பப் பயிற்சிக்குத் தேவைப்படுகின்றன. பிறகு அவரவர் உயரத்திற்கு மேல் நான்கு சாண் உயரமுள்ள இரண்டு பிறம்புகள் வைத்துப் பயிற்சி செய்ய வேண்டும். அதற்குப் பிறகு மூன்றாவது நிலையாக அவரவர் உயரத்திக்கு மேல் ஆறு சாண் உயரமுள்ள இரண்டு பிறம்புகள் வைத்துப் பயிற்சி செய்ய வேண்டும்.

குறிப்பு: (I) நெடுநேரம் இந்தக் கொம்புகளை (கம்புகளை அல்லது குச்சிகளை) வைத்துப் பயிற்சி செய்யவேண்டும் என்பதால் இவை மூங்கிலாக இல்லாமல்; பிறம்பாக இருப்பதில்தான் நல்லது.

(II) மூங்கில் கம்புகளை வைத்தும் இப்பயிற்சிகளைச் செய்து பார்த்து உள்ளனர். அதனுடைய விளைவாகக் கை விரல்களின் மென்மையும்,உள்ளங்கையின் மென்மையும் குறைந்து இருக்கின்றன. இதனால், கம்பு வீச்சின் நுண்மையும், அரிய கலைத் தன்மையும் பெருமளவில் பாதிக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கலையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட தெய்வீகத் தன்மை' கிடைக்காமல்; வறட்டுத் தனமான முரட்டுத் தனமான கொலை வெறியுடைய போர்ப்பண்பே வளர்ந்திருக்கின்றது. எனவே, பட்டாளம் என்னும் தற்கொலைப் படைக்கு மூங்கில் கம்புகளைப் பயன்படுத்தி இந்தக் கலைகளைப் போர்க் கலைகளாக(Martial Arts) சேவலோன் கலைகளின் பிரிவு களாக (Shaolin Arts) கற்றுக் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. பிற்காலச் 'சோழப் பேரரசின் காலத்தில் அப்பேரரசின் தந்தையான (The Father of the Later Chola Kingdom) தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர்

[தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க]

# ஊசலாட்டம்
# இந்து மறுமலர்ச்சி இயக்க ஊக்கம்
# தேயுமா! ஓயுமா! மாயுமா!

அன்புச் சேவுக!

நாம், ஒரு பண்பாட்டுப் புரட்சி இயக்கம்! நமக்கெனப் பழம்பெரும் வரலாறு, இலக்கியம் தத்துவம், வாழ்வியல் நெறி முறை ...முதலியவை உண்டு. ஆனால், கண்மூடிப்பழக்க வழக்கங்களாலும் மூடநம்பிக்கைகளாலும். தவறான தலைமை களாலும், இனப்பற்று மொழிப்பற்று இல்லாமையாலும், இனஒற்றுமையும் ஒருமைப் பாடும் இல்லாததாலுமே...... அனைத்தும் மண்மூடிப் போயின. எனவே, நாம். இருளுக்குள் இருக்கிறோம் நமக்குள் இருள் இருக்கக் கூடாது.

நண்ப! நூற்றுக்கணக்கான முறை உறுதிமொழி வழங்கிக் குருவையே தாயாக, தந்தையாக, தெய்வமாக, வாழ்வாக ஏற்பவர்களைக் கொண்டுதான் அருட் -படை உருவாக்கப்படல் வேண்டும். ஆனால், நம்நாட்டில் படித்த இளைஞர்களில் அலுவலக உழைப்பாளிகளான அறிவியல் சீவிகள் என்றும்; விவசாயம், தொழில் வாணிகம், கலை .... என்று உடலுழைப்பாளிகளான செயல் சீவிகள் என்றும் இரு பெரும் பிரிவுகள் உள்ளன. இவற்றை இணைத்தேயாக வேண்டும்.

நமது, அறிவியல் சீவிகள்தான் அனைத்து வகையான இயக்க நடவடிக்கை -களைத் தலைமை தாங்கி முன்னின்று வழிகாட்டி நடத்தவேண்டும் ஆனால், ஊசலாட்டமும், திசைதிருப்பலும், திருத்தல்வாதமும், ஒதுங்கலும், பதுங்கலும்...... எப்படியோ நமது அறிவியல் சீவிகளிடம் ஆங்காங்கே முளைவிட்டுக் கிளைத்துள்ளன. இவை, செழித்து வளருமுன் தத்துவ விளக்கம், கொள்கை விளக்கம் செயல்திட்ட விளக்கம், குறிக்கோள் நோக்கம்...... முதலியவைகளைப் பணியாளர்களாக நியமித்து இத்தவறான களைகளைப் பயிரிலேயே வேருடன் பறித்தெடுக்க வேண்டும். இதற்குத் துணிவும், நேர்மையும், நடுநிலையும், பொறுமையும், பொறுப்பும், உரமும், தரமும், திரமும், திறமும், தீரமும், வீரமும உடைய பல செயல்கள் ஏட்டளவிலும் செயலள -விலும் வழங்கப்படல் வேண்டும்.

நண்ப! யாம் யாரையும் குறைகூற முயலவில்லை ஆனால், நம்மவர்களுக் கிடையே சினிமாவும் சீமைச்சாராயமும, சிகரெட்டும...ஆட்சிபுரிந்து அனைத்தையும் மறந்து செயல்படக்கூடியவர்களை உருவாக்கும் நிலை வளர்ந்து விடக்கூடாது. அதற்கு இதுகாறும் வெளிவந்துள்ள 35 முப்பத்தைந்து குருதேவர் மாத அறிக்கைகளையும்; ஓர் ஆண்டு மலரையும் ஏழெட்டுத் தனிநூல்களையும திருப்பித்திருப்பிப் படிக்கும் பழக்கத்தை மேற் கொள்ளுமாறு அனைவருக்கும் அறிவுரை வழங்கவேண்டும். இதனை, நமது அறிவியல் சீவிகளுக்குச் சட்டமாகக வேண்டும். அப்பொழுது தான். அவர்களின் மயக்கம், தயக்கம் பேதளிப்பு, ஊசலாட்டம்... முதலியவை அகலுறிடும.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

# சித்தர் இராமாயணம் - 9

**சென்ற இதழ் தொடர்ச்சி**

**[இராவணனின் இறந்த சடலத்தின் மீது விழுந்து அவனுடைய மனைவி வண்டமர்குழலி புலம்புவது. அருகில் அவர்களின் குருதேவர் யக்ஞவல்லி இருக்கிறார்.]**

'குருதேவரே! என் கணவரைப் போலவே எனது மருமகன் இராமனும் ஆறு காலம் நீராடிச் சிவபூசை செய்யும் சிறந்த சிவபத்தனாகவே இருந்தான். ஆனால், அவன் சீதையைப் பிரிந்ததிலிருந்து தான் சிவபூசையை மறந்தான், திருநீறைத் துறந்தான். அதனால்தான் அவன் முறையற்ற முறைகளில் போர்புரியவும், நீதி நேர்மையற்ற செயல்களில் ஈடுபடவும், குரங்குகளைத் துணையாக்கிக் கொண்டு வாழும் காட்டு மனிதனாகவும் ஆகிவிட்டான். அவனை தனது சிவக்கோலம் சீர்திருத்-திடும்; செம்மைப்படுத்திடும்; மெய்யறம் உணரச் செய்யும்; நேர்மையான வீரப் போர் விளைவிக்கத் தோன்றும் என்றெல்லாம் நம்பினாரே!, என் கணவர். அவர் நம்பிக்கை வீணாகிவிட்டதே. அவர் மருமகன் சிவபூசையை மறந்தவனாக, திருநீறைத் துறந்தவனாக சிறந்த சிவபத்தரான அரக்கர்கோனை சூழ்ச்சியாகக் கொன்று சிவ நெறி விரோதியாகி விட்டானே! சிவ பூசைக்குப் பயன் இதுதானா! தாங்கள் அந்த இராமனுக்குச் சிறந்த சிவ பத்தனாக வாழச் சொல்லியிருக்கக் கூடாதா! சிவபத்தர்-களுக்கிடையே போர் நிகழத் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கலாமா!'' என்றும்

'குருதேவரே!, சிவபத்தியில் சிறந்த அயோத்தி அரசனின் குடும்பம், மூவுல-கிலும் சிறந்த சிவபத்திச்செல்வரான என் கணவருக்கே தீங்கு செய்யலாமா? இதனை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கலாமா?' என்றும்,

'குருதேவரே!, சிறந்த சிவயோகியான சனகரின் வளர்ப்பு மகளாக வளர்ந்த என் மகள் சீதையை திருமணத்திற்குப் பிறகு அடையாளம் கண்டுகொண்ட கைகேயி, அரக்கர் மகள் அரசகுலத்தின் அரண்மனைக்குள் வாழக் கூடாது என்றெண்ணித்தானே என் மகளைக் காட்டுக்கனுப்பினாள். இந்தக் கைகேயி அரக்கர் குல மகளை மணந்த இராமன் முடிசூட்டி நாடாளக் கூடாதே என்று கருதித்தானே இராமனுக்குப் பட்டம் சூட்டுவதைத் தடுத்துக் காட்டுக்கு விரட்டினாள். இவற்றை உணர்ந்திருந்த தாங்கள் ஏன் கைகேயியைத் தடுத்திருக்கக் கூடாது? என்றும்

'குருதேவரே! சகல சாத்திறங்களும் பெற்ற தசரத மன்னன் என் மகள் சீதையை முழுமனதாக மருமகளாக ஏற்றுக்கொண்டார். ஆனால், அவரது மூன்று பட்டத்தரசிகளும் என் மகளையும், மருமகனையும் நாட்டை விட்டு ஓட்டுவதில்தான் அக்கறையாக இருந்தார்கள். கைகேயி தான் பெற்ற இரண்டு வரங்களைப் பயன் படுத்தித்தான் என் மகளையும், மருமகனையும் காட்டுக்கு விரட்டினாள். அந்த மூன்று பட்டத்தரசிகளும் தாங்கள் தாலியறுத்தாலும் பாதகமில்லை; தன்னுடைய மருமகள் வாழக் கூடாது என்றுதான் நினைத்தார்கள். இந்தக் கொடியவர்களிடம் என் மகள் சீதை எப்படி வாழப்போகிறாள்? நாளை நாடு திரும்பப் போகும் என் மகளுக்கு அயோத்தி அரண்மனைக்குள் வாழ்வு இருக்குமா? இருக்காதா?. எப்படியும் அந்த இரக்கமற்ற கொடிய அரக்கிகள் என் மகளை மட்டுமாவது மீண்டும் காட்டுக்கு அனுப்பி விடுவார்கள். அப்பொழுது தாங்கள்தான் என் மகளைக் காப்பாற்ற வேண்டும். அவளை உங்களிடம் அடைக்கலம் தருகிறேன்', என்றும்,

'குருதேவரே! எங்களுடைய அரக்கர் குலம் முற்றிலும் அழிந்து விட்டது. இனி என் மகள் சீதையின் வயிற்றில் பிறக்கும் குழந்தைகள் தான் எங்களுடைய அரக்கர்குலப் பெருமைகளனைத்தையும் வாழ வைக்க வேண்டும். எனவே, என்னு-டைய மகள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளுக்கு நீங்கள் குருவாகயிருந்து அனைத்துக் கலைகளையும் கற்பிக்க வேண்டும். என் மகளைக் கொடுமைப்படுத்தியவர்-களைப் பழிக்குப்பழி வாங்க வோண்டும். அல்லது அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும். எனக்கு இந்த வரத்தை நீங்கள் தர வேண்டும்,' என்றும்,

'குருதேவரே! என் மருமகன் எடுப்பார் கைப்பிள்ளையாகத் தான் இருக்கிறான். என் மகளின் அழகிலே மயங்கி கட்டுண்டுக்கிடந்த இராமன் தன்னுடைய தாய் மார்கள் சொல்லியதைக் கேட்டு (பதினான்கு) 14 வருடங்களுக்கு என் மகளோடு வாழ்ந்து முடித்து அவளைக் காட்டிலேயே விட்டுவிட்டு நாடு திரும்பத் துணிந்தான். அப்படிப்பட்ட அவனுக்கு என் மகளின் அருமையை உணர்த்தத்தான் என் கணவர் இலங்கை வேந்தன். அரக்கர்கோன் இராமனிடமிருந்து சீதையைப் பிரித்து அழைத்து வந்தார். என் மகள் சீதை, தன் தந்தையைக் கண்டவுடனேயே, இளங்கன்று தாய்ப் பசுவை மோப்பத்தால் இனங்கண்டு ஓடி வருவதைப்போல் ஓடிவந்து கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கதறியழுதிருக்கிறாள். அதனைக் கண்டு வருந்தியே என் கணவர் இராமனைக் கண்டு நேரில் பேசாமல் சீதையை அவன் வருவதற்கு முன்பே தேரில் ஏற்றிக் கொண்டு வந்தார். ஆனாலும் நான் சீதையைச் சந்தித்து விட்டால் என் கோபத்தால் உடனே இராமனுடன் போர் செய்ய நேரிடும் என்றெண்ணி அஞ்சித்தான் என்மகள் சீதையை நாங்கள் தங்கியிருந்த அரண்மனையை விட அழகும், வசதிகளும் நிறைந்த அசோகவனத்தில் அவள் விருப்பம் போல் தங்கி மகிழ்ச்சியாக இருக்கச் செய்தார். ஆனாலும் அவள் தன்னுடைய கணவனின் வீட்டுப்பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகவே அழுதுபுலம்பி அசோகவனம் வந்த அனுமாரி டம் சண்டைபோட்டுத் தன் கணவனை உடனே இலங்கை வரச் செய்தாள். இப்படிப் பட்ட என் மகள் தனக்குரிய அயோத்தி அரியாசனத்தில் பட்டத்தரசியாக அமர்ந் தேயாக வேண்டும். அந்த நிகழ்ச்சி இராமனின் முடிசூட்டு விழாவாக இருப்பதை விட என்மகள் சீதையின் அரியணை ஏறும்நிகழ்ச்சியாக, பட்டத்தரசியாக முடிசூட்டும் விழாவாக, சூரிய குலம் சீதாஇராமனின் புகழால் நிலைத்தபேறு பெறுவதாக அமைய வேண்டும். தசரதராமன், சூரிய குலராமன், அயோத்திராமன் .. இனிமேல் என் மகளின் பெயரால் சீதாஇராமன் என்றும், வைதேகி இராமன் என்றும், சானகி இராமன் என்றும், இலக்குமி இராமனாக அழைக்கப்பட்டாக வேண்டும். ஏனெனில் என் மகள், தன் கணவன் வீட்டுப் பெருமைக்காக தன் தந்தையையும், தம்பிகளையும், தாயையும் பலியாகக் கொடுத்திருக்கிறாள். அவள் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். அதற்குச் சான்றாக சீதாஇராமனின் அரியணை ஏறும்காட்சிதான ஓவியங்களிலும், சிற்பங்களிலும், இலக்கியங்களிலும், வழிபாட்டுக் கூடங்களிலும் நிலைத்திருக்க வேண்டும். இந்த வரத்தை சோதனை மிகுந்த வாழ்க்கை வாழ்ந்த என் மகளுக்கு இறவாப் புகழைத்தேடித் தர நீங்கள்தான் நல்க வேண்டும். உங்களால் தான் இதைச் செய்ய முடியும்,' என்றும்,

(தொடரும்)

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்மிடம் வளமான, வலிவான கொள்கை இருக்கிறது; தெளிவான திட்டவட்டமான குறிக்கோளும் இருக்கிறது; மிக எளிய செயல்திட்டங்களும் இருக்கின்றன என்ற பேருண்மை அவர்களுக்குப் புரியும்.

நண்ப! தலைமையை முழுமையாக ஏற்றுத் தலைமைக்கு முற்றிலும் கட்டுப்பட்டு எந்த ஆணையையும் ஏற்றுச் செயல்படுத்தும் வீரர்களாக அறிவியல் சீவிகளை உருவாக்க இயலாது என்ற நிலை நாளுக்குநாள் தெளிவாகிறது. மேலும் நகர நாகரிகமும் மேம்போக்கான வாழ்வும் அறிவியல் சீவிகளைக் கோழைகளாகவும் குழப்பவாதிகளாகவும், குறுகிய போக்குடையவராகவும் ஆக்கியுள்ளன. எனவே, நாம், அதிகப் படிப்பில்லாதவர்களையும், உடலுழைப்புப் பாட்டாளிகளையும் நம்பித் தான் அருட்பணி திரட்டவேண்டும். இதற்கு அருட்பணி விரிவாக்கத் திட்டம் தான் உரிய உயர்ந்த வழி

அன்பு நண்ப! அ.வி.தி. நிலையாட்களை நாடெங்கும் தோற்றுவிக்க வேண்டும். அ.வி.தி. செயல்வீரர்களை உருவாக்கும் பணியிலேயே முழுக்கருத்தையும் கவனத்தை-யும் செலவிடவேண்டும். இ.ம.இ யின் மூலம் உருவாகும் கொள்கைவாதிகள் குடிகாரர்கள் போல் திடீர்திடீரென்று திசைமாறவும், திருத்தல்வாதம் போதிக்கவும் ஆரம்பித்திடும் நிலையை வளர்க்கக் கூடாது. ''செய் அல்லது செத்துமடி'' (Do or Die) என்ற ஆணைக்கு அடிபணியும் வீரமனம் அ.வி.தி.யால் தான் உருவாகும்.

நம்மவர்கள், கட்டாயமாக அன்றாடப் பூசை, வாரபூசை (வியாழன், ஞாயிறு) மாதப்பருவப்பூசை, அமாவாசை வேள்வி முதலியவைகளைக் கட்டாயமாகப் பயிற்சியாக்கவேண்டும். இல்லாவிட்டால் அருட் பேரரசான பிற்காலச் சோழப் பேரரசின் வீழ்ச்சியே நமக்கும் ஏற்படும். எனவே, யாம் நாளோலக்கத்திலிருந்தும் திருவோலக்கத்திலிருந்தும் விடுக்கும் இந்த அருளாட்சி ஆணையின்படி நமது சன்னிதானங்கள் மட்டுமாவது முழுமையான அ.வி.தி செயல் வீரராவதற்கு மேற்குறித்த பயிற்சி நிலையைக் கடைப்பிடித்தேயாக வேண்டும். இதற்குரிய விளக்க ஆணைகளைத் திருவோலை நாயகமாகிய தாங்கள் உடனே எங்கும் அனுப்புமாறு குருவாணை வழங்குகிறோம்

அன்பு

ஞாலகுரு சித்தர் கருவூரூர்

---

'தமிழ் மொழி'' அருளுலக பொருளுலக அறிவியலில் முழுமையான வளர்ச்சி பெற்ற ஒரே மொழி''

—ஞாலகுரு சித்தர் கருவூரூர்.



# இந்தியாவில் மார்க்சீயம் - 19

—சித்தர்

இப்படியெல்லாம், கொடிய வறுமையைச் சந்தித்த அவர் வறுமையிடம் இருந்து தானும் தன்னைச் சார்ந்தவர்களும் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று தன்னலத்தோடு எண்ணவோ, எண்ணிச் செயல்படவோ முற்படவில்லை. அவர் பரந்து விரிந்து பட்ட அருள் உள்ளத்தோடு இம்மண்ணுலகில் யாருமே வறுமையால் தாக்கப்பட்டு துன்புறக் கூடாது என்று எண்ணி அந்த எண்ணம் செயலாவதற்குரிய சிந்தனைகளைச் சிந்தித்து கண்டறிந்தார். 'தன்மகன் பிறந்த போது தொட்டில் வாங்கவும் பணமில்லை; அம்மகன் இறந்தபோது சவப்பெட்டி வாங்கவும் பண மில்லை..... ' என்று வருந்தக் கூடிய வறுமையான வாழ்க்கையை வாழ்ந்த காரல் மார்க்சுதான் சமத்துவச் சகோதரத்துவப் பொதுவுடைமைத் தத்துவத்துக்குத் தொட்டி லையும், சர்வாதிகார முதலாளித்துவத்துக்குச்சவப்பெட்டியையும்செய்துமுடித்திட்டார்.

இப்படி மார்க்சு செல்வக் குடும்பத்தில் தோன்றிய போதிலும் அவனின் இளமைப் பருவம் தொழிலாளர் நலன்களைப் பற்றி சிந்திக்க வைத்துக் கொண்டிருக் கும் காலமாக இருந்தது. மேலும், இளைய எகாலியர்களுடன் இணைந்ததால் சிந்தனைச் சத்தியைப் பெற்றதோடு மட்டுமல்லாமல்; அரசியல், தத்துவம், பொருளாதாரம், மொழியியல்.........துறைகளைப் பற்றி நன்கு கற்க வைத்தது. இந்தத் துறைகளின் ஆரம்பமும் வளர்ச்சியும் சமுதாயத்தைத் தழுவியே இருக்கின்ற காரணத்தினால் அவரின் கண்ணோட்டமும் சமுதாயத்தை விட்டு நீங்காமல் போகாதல்லவா?

—தொடரும்

---

# சைவ - சித்தாந்த சாத்திரங்களே மெய்யான இந்துமத சாத்திரம்

சென்ற இதழ்த் தொடர்ச்சி

... .....எனவே, தமிழினத்துக்கு மட்டும் தலைவர்களாகப் பதினெண் சித்தர்களை எண்ணாமல் இம்மண்ணுலக மனித இனங்கள் அனைத்திற்குமே தலைவர்களாகப் பதினெண்சித்தர்களை எண்ண வேண்டும். அப்பொழுதுதான் உலகச்சமத்துவம் உலகச்சகோதரத் தத்துவம், உலகச் சமாதானம், உலக ஒற்றுமை, உலக அமைதி, உலக நல்லுறவு, உலகப் பொதுவுடமை, உலகக் கூட்டுறவு, உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு, உலக மானுட விடுதலை, உலகமனித உரிமை... முதலியவைகள் எல்லாம் கனவு நிலைகளை கடந்து நனவு நிலைகளை அடைந்திடும். எனவே கருவூர்த் தேவரை ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், அருள்நந்தி சிவாச்சாரியாரை -யாவது ஏற்றுக்கொள்ளத் தயாராகட்டும். இந்தத் தமிழகம். ஏனெனில், தமிழர் .களுக்கு மிகுந்த தீமைகளை இழைத்து வந்திட்ட பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் இனிமேலும் தனித்த ஓர் இனமாக வாழாமல், அனைத்து வகையான தனித்தன்மைகளையும அகற்றி விட்டுத் தமிழினத்தோடு இரண்டறக் கலந்து ஒன்றாகிடக் கூடிய பொற்காலம் அருள் நந்தி சிவாச்சாரியாரின் போதனை களிலும் சாதனைகளிலும் தான் இருக்கின்றது.

முற்றும்

# புரட்சி மயங்கக் கூடாது – 6

—சித்தர் கருவூரார்

இன்றைய எல்லாத் துறைத் தலைவர்களும் தங்களுடைய புகழ், சொத்து, செல்வாக்கு...... முதலியவைகளை என்றென்றும் நிலையாகக் காத்துக் கொள்ள விரும்பும் தன்னல வெறியர்களாகவே இருக்கின்றார்கள். எனவேதான், இவர்கள் பழமைப்பற்றுமிக்கவர்களாக மாறிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், நம் போன்ற மதத்துறையினர்...... 'மதத்தால்தான் பழமையும், மடமையும், மூடநம்பிக்கையும், அறியாமையும், அடிமைப்பண்பும், சுரண்டலும், முதலாளித்துவ ஆதிக்க நிலையும், ஆதிக்கத் துறையாரின் அடக்கு முறையும், ஏமாற்றும், சாதிவெறியும், தீண்டாமையும் ... மிகுந்திருக்கின்றன. தனிமனிதச் சர்வாதிகாரமும், மேலாண்-மையும், சூழ்ச்சியாட்சிகளும்... மதத்தால் உரமிட்டு வளர்க்கப்படுகின்றன' ... என்ற பழி மதத்துக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பதை முற்றிலும் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டேயாக வேண்டும். அதற்காகவே, நாம் மிக முனைப்போடும் ... இந்து மதத்தில்தான் மிகச்சிறந்த 'முற்போக்குக் கொள்கைகள்', 'பகுத்தறிவுப்போக்குகள்', 'அறிவியல் அணுகு முறைகள்', 'முழுமையானபுரட்சித் திட்டத் தத்துவம்'....முதலியவை இருக்கின்றன... என்ற பேருண்மையினைப் பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் வெளியிட்டு வருகிறோம்.

இன்னும்சொல்லப் போனால், நாம், அருட்பணிவிரிவாக்கத் திட்டங்களின் மூலமே 'இந்து மதம் அன்றாட வாழ்வின் தேவைகளையும் சிக்கல்களையும் தீர்த்து வைக்கக் கூடிய மிகச்சிறந்த சாதனம்' என்பதை விளக்குகின்றோம். மேலும், நாம் தனிமனிதர்-களைக் 'கடவுட்டன்மை' பெறுமாறு செய்வதாலும், பல நோய்களுக்குத் தெய்வீக மருத்துவ முறையில் நலமளிப்பதாலும், மானுட வாழ்வுக்கு 'இந்துமதம்' இன்றியமையாதது என்ற பேருண்மை விளக்கப்படுகின்றது. இதனால், அறிவுத்துறையோரா, கலைத் துறையோர், அலுவலகப்பாட்டாளிகள், வாணிப வட்டாரத்தார், தொழில் வட்டாரத்தார், மூதாதையர் சொத்துக்களால் சுகவாழ்வு வாழும் சொத்துபடைத்த வர்க்கத்தார்... முதலியோர்... 'மீண்டும் இந்து மதத்தின் மூலம் இந்நாட்டில் சமுதாயமும், அரசியலும் பிற்போக்கு நிலைக்குத் தள்ளப்படும் ...' என்று எண்ணி மகிழ்ந்து நமக்கு உதவ ஓடோடி வருகிறார்கள். அவர்களை ஆரம்பத்திலேயே எச்சரிக்கை செய்வதற்காகத்தான்; நான், நூறு, ஆயிரம்... என்று இந்து மதத்தின் உண்மையானதத்துவ சித்தாந்த மறையாந்த...நிலைகளை விளக்கும் அஞ்சல்களையும், கட்டுரைகளையும் எழுதிக் குவிக்கிறேன். அவற்றை உங்களைப் போன்றோர் கையெழுத்துப்பிரதி நகல்களாகத் தயாரித்தே நாடெங்கும் அனுப்புகிறீர்கள். இன்னும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை எனது படைப்புகள் அச்சாகிடாமல், 'கையெழுத்து நூல்களாகவே எங்கும் பரவி கொள்கைகளை விளக்குவது தான் நல்லது என்று கூறுகிறேன்.

இன்றைக்குத் திரைப்படம், நாடகம், பத்திரிகை, புத்தகம், பிறகலைகள் முதலியவற்றின் மூலம் இன்றைய ஆளும் வர்க்கமும், முதலாளிகளும் சமுதாய மேட்டுக் குடி மக்களும் எப்படியாவது பிற்போக்குச் சக்திகளையும், செயல் நிலைகளையும், வாழும் வடிவமைப்புகளையும் அப்படியேபாதுகாத்திடல்வேண்டும் என்ற பெரு முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அதற்காகவேவிளையாட்டு விழாக்கள்; பெரியார்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அரசியல் தலைவர்கள் ...முதலியோர்களின் பிறந்த இறந்த நாள் விழாக்கள்; போராட்டங்கள், புதியஇயக்கங்கள்... என்றுபல திசை திருப்பும் முயற்சிகள் தொடர்ந்து அரசியல்வாதிகளாலும் முதலாளிகளாலும் செய்யப்பட்டு வருகின்றன.

(தொடரும்)

# கருகுல சிலை வடிவமைப்பு

## துர்க்கை அம்மன் சிலை

### சென்னை காரனோடைக் கருகுலத்தில் அமையவிருக்கும் சிலைகளின் வடிவஅமைப்பு பற்றிய குறிப்புக்கள்

1. துர்கையின் தலை சாய்ந்து இருக்கவேண்டும். துர்கையின் முகத்தில் அரச கம்பீரமும், மகிசாசூரனைக் கொன்ற வெற்றிப்பெருமிதமும், கண்களில் கோப உணர்ச்சியும் இருக்க வேண்டும்.

2. முகத்தினுடைய முகவாய்க்கட்டை சற்று லேசாக முன்நோக்கி உயர்த்தி இருக்க வேண்டும்.

3. தலைக்கிரீடம் எடுப்பாக கீழ் இருந்து மேல் கூம்பாகச் (குவிந்து) செல்ல வேண்டும்.

4. மேலே நோக்கியுள்ள வலதுகையும் இடது கையும் நன்றாக விரிந்து காட்ட வேண்டும். விரல்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

5. வாழ்த்துகின்ற வலது கைவிரல்கள் நன்கு வளைந்து வாழ்த்த வேண்டும். கைவளைவுக்கும், விரல்வளைவுக்கும் நன்கு இடைவெளி காட்ட வேண்டும். வாழ்த்துகின்ற கை எப்பொழுதும் மார்பளவு உயரத்திற்கு இருக்க வேண்டும்.

6. கிழே தொங்குகின்ற இடது கை தோளிலிருந்து மணிக்கட்டுவரை சிறுகச்சிறுக பெண்ணின் கைபோல் பருமன் சிறியதாகக் குறைந்து வர வேண்டும். நுனிவிரல்கள் (உள்ளங்கை), புறங்கை, கீழ் நோக்கித் திரும்பி இருக்க வேண்டும். இடுப்புக்குக் கிழே கால் தொடை வரை, முழங்கால் வரை பருமனில் குறைவு வேண்டும். அதாவது, வாழைத்தண்டு போல் அடியில் தடித்தும் நுனியில் சிறுத்தும் வர வேண்டும். முழங்காலில் இருந்து கணுக்கால் வரை இயற்கையாக அமைப்பு இருக்க வேண்டும். கால் பாதமும் விரல்களும், பெண்களுக்கு உரியது போல் வளைவு, நெளிவுடன் நீண்ட விரல்கள் குவிந்து இருத்தல் வேண்டும்.

7. எருமையின் முகவாய் நன்கு தூக்கி இருக்க வேண்டும். மூக்கின் இரண்டு துவாரங்கள், வெளியே நீட்டிக் கொண்டிருக்க; நாக்கு, கீழ் வரிசைப்பல் தெரிய வேண்டும்.

8. எருமையின் தலை உருண்டு திரண்டு நன்றாக எடுப்பாக இருக்க வேண்டும். காது நன்றாக தனியாக எடுப்பாக இருக்க வேண்டும். அடி காது வளைந்து இருக்க வேண்டும். எருமையின் தலை நன்றாக குண்டாக சந்து பிடரியோடு இருக்க வேண்டும். கால்நுனிக்கும் எருமையின் தலைக்கும் இடைவெளி நன்றாக இருக்க வேண்டும். எருமையின் கொம்பு நன்கு வளைந்து விரிந்துசெல்ல வேண்டும் நுனி கொம்பு காலை குத்துவது போல் அமையக் கூடாது. எருமையின் தலை தாழ்ந்தும், மூக்கு தூக்கியும் இருக்க வேண்டும்.

# ஐந்தொழில் வல்லான் நிலை - 3
## நமசிவாய + நமச்சிவாய விளக்கம்

ஐந்தொழில் வல்லான் நிலை ஒரு சிலையாக வடிக்கப்பட்ட நடராசர் சிலையைப் பற்றி விளக்கினோம். அடுத்து இதே நடரர்சர் சிலை நமச்சிவாய என்ற சொல்லுக்கு உரிய விளக்கமாகவும் விளக்கிக் காட்டினோம்.

ந — ஆக்கல் — வலது மேல்கை
ம — காத்தல் — வலது கீழ்க் கை
சி — அழித்தல் — மேல் இடக்கை
வா — மறைத்தல் — கீழ் இடக்கை
ய — அருளுதல் — தூக்கிய இடக்கால்
ச் — ஒடுக்குதல் — ஊன்றிய வலது கால்

இப்படி ஐந்தொழில் வல்லான் சிலை ஆறு தொழில்களை விளக்கக் கூடிய ஒன்ருகவும் இருக்கிறது.

குறிப்பு: இதைத் தான் பதினெண் சித்தர்கள், 'ஐந்தும் ஆறும் அறியாதவன்' 'ஐந்தை ஆருக்கத் தெரியாதவன்' 'ஐந்தும் ஆறும் ஒன்றென உணரத்தெரியாதவன்' ......என்று குறிக்கிருர்கள்.

நடராசர் சிலை சிவபெருமானின் **தத்துவ விளக்கத் தோற்றம் தான்.** எனவே தான், இதில் சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் செதுக்கிக் காட்டப்படவில்லை. ஆனல், இந்த நடராசர் சிலையை ஐந்து வகையான வண்ணமுடையனவாக வண்ணப் பூச்சு பூசியோ அல்லது ஐந்து வகையான பொருள்களில் செய்தோ பூசையில் வைப்பதின் மூலம் நடராசர் சிலைக்கு ஐந்து முகங்களும், அவற்றுக்குரிய தொழில்களும் விளக்கப்பட்டு விடுகின்றன. இது பற்றி குருபாரம்பரியத்தில் நிறைய தத்துவ விளக்கங்களும், சித்தாந்த விளக்கங்களும இருக்கின்றன. ஆனல், **'ஐந்தொழில் வல்லான் நிலை விளக்கம் குருவழிக்காண்க,' 'ஐந்தொழில் வல்லான் நிலை செவியருகே குவிந்த இதழின் உதிரும் நிலை போன்ற மெல்லிய ஓசையுடைய சொற்களால் மட்டுமே வழங்கப்படல் வேண்டும்', 'மிகுந்த தரமும், திரமும், அறமும், பாரம்பரியம் கடந்த பக்குவமுடைய தக்காருக்கு மட்டுமே ஐந்தொழில் வல்லான் நிலை விளக்கம் அருளப்படல் வேண்டும்,' 'குருவழியாக ஐந்தொழில் வல்லான் நிலை விளக்கம் உணர்ந்து வழிபடுபவர் கருநிலை கடப்பர்'**......என்று சட்டதிட்டக்கட்டுப்பாட்டு வாசகங்களை வழங்கியிருக்கிருர்கள் பதினெண்சித்தர்கள். இருந்த போதிலும், இராசிவட்ட நிறை-வுடையாராகத் தோன்றியிருக்கும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரார், பதினெண்சித்தர் பீடாதிபதிக்குரிய அருட்பட்டங்களை அறுபத்து நான்கு பட்டங்களுக்கு மேலே சித்தி செய்து அடைந்ததாலும்; அரசயோகம் செய்து கால்நூற்ருண்டு காலத்திற்கு மேலாக **'ஒளிவில் ஒடுக்க நிலையில்'** வாழ்ந்து, இல்லறத்தார் மூவர் துணையிருக்க அண்டபேரண்ட ஆதிசத்திகள் சனனி தானம், என்ற நிலையை அடைந்துள்ளார் என்பதாலும் மேற்படி சட்டதிட்டக்கட்டுப்பாடு வாசகங்களைக் கடந்து இவ் விளக்கத்தை வழங்குகிருர். மேலும், இவர், அருளுலகத்தார்களாலும், பொருளுலகத்தார்களாலும் ஒருமனதாக குருதேவர் இந்துமதத் தந்தை, ஞானச்சாரியார், ஞானகுரு, தேவகுரு, அசுரகுரு, அருளாட்சி நாயகம்...எனப்படும் நிலைகளையெல்லாம் பதினெட்டாண்டுகாலப் பயிற்சியாலும் பதினெட்டாண்டுகால முயற்சியாலும் சித்தியாக்கியுள்ளதை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதால் விண்ணையும், மண்ணையும் இணைக்கும் மாபெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ருர்.

[தொடரும்]

2 ம் பக்கத் தொடர்ச்சி

பீடாதிபதி' குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள் அதிரடிப் படையினராகத் (கொரில்லாப் படை) தயாரித்த படையினருக்கு இவற்றைக் கற்றுக் கொடுத்து காடுகளிலும் மலைகளிலும் கிராமப் புறங்களிலும் விரிந்து பரந்து தங்கி ஆட்சியின் பாதுகாப்பைக் காக்கும் படைகளாக இருந்து செயல்பட செய்தார். எனவே, இன்றைக்கும் இமயம் முதல் குமரி வரை உள்ள மலை-வாழ் மக்களிடமும்; காட்டுவாசிகளிடமும் விந்தியத்திற்கு வடக்கேயும் இந்தக் கலைகளின் மிச்ச சொச்சங்களும் சுவடுகளும் நிறைய இருக்கின்றன.

(III) சேவலோன் கலைகளின் ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்று பிரிவுக்குரிய கொம்பு விளையாட்டுக்கள்தான், காலப் போக்கில் 'குறிஞ்சி,' 'துலுக்காண,' 'பாடலி' என்ற மூன்று பெரும் பிரிவுகளாகத் தனித்து வாழ்கின்றன. இம்மூன்று கலைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்ற பேருண்மை யாருக்கும் தெரியாது. பதினெண் சித்தர் பீடாதிபதிகளைத் தவிர இந்த மூன்று பிரிவுகளையும் ஒன்றிணைக்க முடியாது. முடியாது, முடியாது, முடியவே முடியாது. வட துருவம் முதல் தென் துருவம் வரை உள்ள கொம்பு விளையாட்டுக்கள், இந்த மூன்று பிரிவுகளே என்ற உண்மை பதினெண்சித்தர்களின் இந்து மதமும், அதன் செயல் வடிவமும் உலகெங்-கும் ஆட்சி பெற்றிருந்தன என்ற பேருண்மையை விளக்கிடக் கிடைக்கின்ற சான்றுகளாம்.

3. ஓகாசனக் கலை முழுக்க முழுக்க அருளுலகுக்கு உரியது என்பதை அது பிறந்த இந்தியாவில் மங்க விட்ட போதிலும் திபெத்து, சீனு, தாய்லாந்து, சப்பான், கொரியா, வியட்நாம், ஆசுத்திரேலியா......முதலிய பகுதிகளிலும், மத்திய அமெரிக்காவில் செவ்விந்தியர்களிடையேயும், மதத்துறையில் பூசை, தவம் (Religious Life) முதலியவைகளில் ஈடுபடுகின்றவர்களின் உடல் கட்டுப்பாட்டுக்கும் மன ஒருமைப் பாட்டிற்கும் ஒரே நேரத்தில் பயன்படக் கூடியது என்று இந்த ஓகாசனக் கலையைத் தான் பயனபடுத்துகின்றூர்கள். அதாவது ஆறு அல்லது ஏழடி உயரமுள்ள நீண்ட கொம்புகளை வைத்துக்கொண்டு பதினெண் சித்தர்கள் வகுத்துள்ள சேவலோன் கலைகளுக்குட்பட்ட அறுபத்து நான்கு வீச்சுமுறைகளில் (தொண்ணூற்ருறும் உண்டு; நூற்றெட்டும் உண்டு) பல வீச்சு முறைகளை வீசித் தங்களுடைய உடலைத் தயாரித்-துக் கொள்கின்றூர்கள். இதனை உடற்பயிற்சி எனறு கூறுவதில்லை. ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற பெயர்களையும் நிலைகளையும் அவரவர் மொழிகளுக்கேற்பக் கூறுகின்றூர்கள்.

**சிறப்புக் குறிப்பு:-** இம் மண்ணுலகில் தோன்றிய அருளாளர்களிலே பதினெண் சித்தர்கள் மட்டும் தான் ஆவி, ஆன்மா, ஆருயிர், என்ற மூன்றைப் பற்றிக் கூறுகின்றூர்கள். பலர் இறப்பிற்குப் பிறகு ஒன்றுமே இல்லை என்று கூறுகினறூர்கள். சிலர் இறப்பிற்குப் பிறகு 'உயிர்' என்ற ஒன்று மட்டும் உள்ளதாகக் கூறுகின்றூர்-கள். இரண்டு மூன்று பேர்கள்தான் இறப்பிற்குப் பிறகு 'ஆவி' என்ற ஒனறு உண்டு; 'ஆன்மா' எனற ஒன்று உண்டு என்று கூறுகின்றூர்கள். இக் கருத்துப் பற்றிக் குருபாரம்பரியம், ''ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்று நிலைகளை விளக்குவதே பதினெண் சித்தர்களின் சீவநெறியான சித்தர் நெறியெனும் இந்து மதம்''-என்ற கருத்து வாசகமும் ''பதினெண்சித்தர் பீடாதிபதிகளே ஆவி, ஆனமா, ஆருயிர் என்ற மூன்று நிலைகளையும் ஓகாசனக்கலைகளின் மூலம் அறியச் செய்வார்கள்'' —என்ற கருத்து வாசகமும்; ''மண்ணும் விண்ணும் இணைய மானுடம் முயலுவது ஓகாசனத்தாலேயே'' என்ற கருத்து வாசகமும்......விளக்குகின்றன.

4. இங்கு படத்தில் விளக்கப்பட்டிருக்கின்ற ஓகாசன நிலை, யோகாசனத்தையும் ஓகாசனத்-தையும் இணைத்து விண்ணையும் மண்ணையும் இணைக்கும் முத்திரை நிலையாகும். இதுபற்றிய விளக்கம் உடலுறுப்புகள், புறத்தோற்றத்தில் எங்ஙனம் அமைந்திருக்கின்றன என்பதை இத்திருவுருவப் படத்தைப் பலகாலம் உற்று உற்று நோக்கித்தான் உணரவேண்டும். இவைகள் அனைத்தும் மறை-களாகக் காக்கப்பட்டு வந்தவை. பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அருட் கொடை வள்ளல் என்ற நிலையிலிருந்து இந்த ஓகாசனத் தோற்றங்களை (ஆறு நிலைகளில் மட்டும் புகைப் படங்களாக எடுக்க அனுமதித்தார் குருதேவர். மற்ற நிலைகளை அடியான்களுக்கு நேரடியாக நிகழ்த்திக்காட்டினார் குருதேவர்) வழங்கியிருக்கின்றார். இத்தோற்றத்தில் உள்ள திரிசூல நிலை, சீவ இலிங்கக் கொடிநிலை, இரு பீடநிலை முதலியவைகளுக்கு உரிய தத்தவ விளக்கங்கள் அடியான், அடியாள், அடியார் என்ற தகுதிகளைப் பெற்றவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளுவதற்கு உரியன. எனவே அவைபற்றி ஈண்டு விளக்கமாக எழுத இயலாது.

5. யோகாசனம் என்பது உடலுறுப்புக்களை மடித்தும், நெளித்தும், சுருக்கியும், நீட்டியும், உயரத்தூக்கியும் அங்கங்களைப் பிரித்தும் இணைத்தும் தரப்படுகின்ற பயிற்சியேயாகும். அந்த உடற்பயிற்சியின் களைப்பினாலும், உடல்தளர்ச்சியினாலும், உணர்வு அயர்ச்சியினாலும் ஏற்படக் கூடிய **மென்மையான உறக்கநிலை அல்லது மயக்கநிலை அல்லது தூக்கநிலைதான் யோகநிலை** என்று பெரும்பாலும் கருதப்படுகின்றது. உடல் துருதுருப்பும் உணர்வு சுறுசுறுப்பும் ஓரளவு அடங்கினால்தான் பத்திநிலையில் அமரமுடியும். எனவே, அந்த நிலையையே, யோகாசனநிலை', 'யோகநிலை', 'தவநிலை'......என்று விளம்பரப்படுத்தப்பட்டு விட்டது. ஆனால், இந்த யோகாசன நிலை பெரும்பாலும் உடற்பயிற்சிநிலையேயாகும். ஏனென்றால், இதனால் அருளைத் தனக்குள் ஊற்றெடுக்கச் செய்யவோ; அல்லது பிறர்க்குள் ஊற்றெடுக்கச் செய்யவோ இயலாது. ஆனால், இந்தப் படத்தில் காட்டியபடி; ஆறடி உயரமுள்ள பிறப்புக் கொம்புகளால் (ஏழரை முதல் எட்டு அடி உயரம் அல்லது பத்து முதல் பத்தரை அடி வரையுள்ள கொப்புகளால்) ஓகாசனப் பயிற்சிகளைச் செய்த பிறகு முதல் பீடத்திலிருந்து அமர்ந்து பிறகு இரண்டாவது பீடத்தில் அமர்ந்து முறையே முதல் பீடத்தில் இடதுகாலை மேலே வைத்தும்; படத்தில் காட்டியபடி இரண்டாவதாக வலது காலை மேலே வைத்தும் இருகைகளையும் இணைத்து விரித்து மண்ணைக்கி காட்டி; இமைமூடி விண்ணோக்கி அருளீட்டி ஓகாசன அருள் வழங்குத் தோற்ற நிலையை பீடத்தில் அமர்ந்து பயிற்சிகளைச் செய்ய வேண்டும். இந்தப் பயிற்சியில் மண்ணும் விண்ணும் இணையும் விசும்பளந்த வடிவம் —> விசும்பு = வானம் (விண்) ≡ விசுவம்; வடிவம் —> உருவம். இந்தச் சொற்களை சமசுக்கிருத மொழி யில் விசும்பு + உருவம் —> விசுவரூபம் என்று குறிக்கப்படுகின்றது. சமசுக்கிருத மொழி தோன்றுவதற்கு முன்பே விசும்பளந்த வடிவக் காட்சிகள் 'துவாபர யுகத்திலும், திரேதகாயுகத்திலும், கிரேதகாயுகத்திலும் நிறைய நடந்திருக்கின்றன.

6. இந்த ஓகாசன நிலையை சேவலோன்கலைகளைப் பயிற்சி செய்த பிறகு பயிற்சி செய்ய வேண்டும். இந்த நிலையில் அமர்ந்திருக்கும் போது ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றையும் பற்றி அறியலாம். இதே விளக்கம் தான் அடுத்து வரக்கூடிய ஐந்து ஓகாசனத் தோற்றக் காட்சி நிலைகளுக்கும் உரியதாகும். ஆனால், ஒவ்வொரு காட்சிகளிலும் அங்கங்களால் காட்டப்படும் ஞான முத்திரை நிலைகள் பற்றிய குறிப்புக்கள் வழங்கப்படும். அவை அருள் வழங்குகின்ற நிலைகள் என்ற காரணத்தினால் தங்களுக்குள் ஏற்கனவே அருள் ஊற்றெடுக்கப்பட்ட சன்னிதானங்-களுக்குத்தான் அவை பயன்படும். இருந்த போதிலும் அருளாட்சி நாயகம், இந்து மத ஆச்சாறியார், தமிழின ஆச்சாரியார் ஞானாச்சாரியார், குவலய குருபீடம், அரச யோகி, அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இந்து மதத் தந்தை, நிறை-யக்னர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாக நின்று வழங்கும் ஞானக் கல்வித் திட்டமே இது.

KVS பிரிண்டர்ஸ் பொன்னேரி.